# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.174/2025** |
| Prosecution witness | : | P.W.2 |
| List of witness | : | L.W.3 |
| Name | : | பாண்டியன் |
| Father's /Husband Name | : | ஜெயராமன் |
| Village | : | மேல ஆதிச்சமங்கலம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 33 |
| Occupation | : | சமையல் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 19th day of January 2026.
A1, A2 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது குடவாசல் மேல ஆதிச்சமங்கலம் தெருவில் வசித்து திருச்சியில் உள்ள உணவகத்தில் சமையல் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் தெருவில் தான் வசித்து வருகிறார்கள். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு கலைவாணி கணவர் சாலை விபத்தில் இறந்து விட்டார். கடந்த 29.05.2025 ம் தேதிக்கு முதல் நாள்எதிரிகள் இருவரும் அ.சா.1 வீட்டு வாசலில் சத்தம் போட்டு சென்றார்கள். சம்பவத்தன்று பகல் 12.00 மணியளவில் அ.சா.1 வீட்டு வாசலில் எதிரிகள் இருவரும் அ.சா.1 ஐ குச்சிகாரி மகளே, தேவிடியா மகளே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள். அவ்வாறு அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் பேசியதில் எனக்கு மிகுந்த அறுவறுப்பையும், ஊர்க்காரர்கள் மத்தியில் எனக்கு தரக்குறைவாகவும் இருந்தது. மேலும் எனக்கு மிகுந்த மனஉளைச்சலையும் ஏற்படுத்தியது. மேலும் அந்த சம்பவத்தை நான் மற்றும் எனது அம்மா பிரேமா மற்றும் தெருவில் உள்ளவர்கள் எல்லாரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நான் மேற்படி சம்பவத்தின் போது சம்பவத்தை விலக்கி விட்டேன் ஆனால் எதிரிகள் மீண்டும் மீண்டும்

பேசிக்கொண்டிருந்தார்கள். பின்பு அ.சா.1 அழுதுக்கொண்டே புகார் கொடுப்பதற்காக காவல் நிலையம் சென்றார். மேற்படி சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் எனது சொந்த ஊருக்கு எப்போது வருவேன் என்றால் 20 நாட்களுக்கு ஒருமுறை எனது அம்மாவினை மருத்துவமனைக்கு அழைத்து செல்வதற்காக வருவேன். நான் சம்பவம் நடந்த அன்று சம்பவயிடத்தில் இல்லை என்றாலும் திருச்சியில் வேலை செய்து கொண்டிருந்தேன் என்றாலும் சரியல்ல. அ.சா.1 எனது உறவினர் மற்றும் பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் சம்பவயிடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.01.19 09:07:23 +05'30'

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`